**PROCEEDING OF THE PUBIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE STATE ENVIRONMENTAL IMPACT ASSESMENT AUTHORITY (SEIAA-TN) FOR PROPOSED MINING PROJECT OF THE UNIT M/S. G. VELU ROUGH STONE AND GRAVEL QUARRY, SURVEY NUMBERS: 4/1, 4/2A, 4/2B, 4/2C, 6/1, 6/2A AND 6/2B OVER AN EXTENT OF 12.80.50 HECTARES, THOLLAMUR VILLAGE, VANUR TALUK, VILLUPURAM DISTRICT.**

**Name of the Project:** Proposed to mining project of Rough stone and Gravel quarry with in an extent of 12.80.50 **hectares** by the unit M/s. G. Velu Rough Stone and Gravel Quarry survey numbers : 4/1, 4/2A, 4/2B, 4/2C, 6/1, 6/2A and 6/2B, Thollamur Village, Vanur Taluk, Villupuram District.

**Venue:** **M/s. Dhanalakshmi Mahal, SH- 136, Karasanur Village, Vanur Taluk, Villupuram District – 604 304**

**Date & Time:** 18.09.2025 - 10.30AM to 11.30 AM

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Thiru. P.Murugesan | Revenue Divisional officer, Villupuram |
| 2. | Dr.S.Rajendiran | District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 3. | Thiru.R.Venkateswaran | Assistant Collector – Trainee<br>Villupuram |
| 4. | Thiru.P.Vidhiyadharan | Tahsildhar, Vanur |
| 5. | Er.S.Elayaraja | Assistant Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 6. | Er.P. Ramkumar | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |

| | | |
|---|---|---|
| 7. | Thiru.N. Dinesh Babu | Assistant,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 8. | Thiru.M.Sadagopan | Typist,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 9. | Thiru.R.Ramesh | Revenue Inspector,<br>Bramadesam |
| 10. | Thiru.G.Velu | The proprietor, M/s. G. Velu Rough Stone and Gravel Quarry, Survey Numbers : 4/1, 4/2A, 4/2B, 4/2C, 6/1, 6/2A and 6/2B, Thollamur Village, Vanur Taluk, Villupuram District |
| 11. | Dr.M.Suresh | EIA Consultant<br>M/s. Global Mining Solutions<br>Omaloor,Salem- 636455 |
| 12. | Thiru.G.Balasubramani | M/s. Global Mining Solutions<br>Omaloor,Salem- 636455 |
| 13. | Public and Environmentalists | 82 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Villupuram District has welcomed the Revenue Divisional officer , Villupuram, Government Officials, General Public and NGO's/ Environmentalist for the Public hearing and informed that the unit of M/s. G. Velu Rough Stone and Gravel Quarry, Survey Numbers : 4/1, 4/2A, 4/2B, 4/2C, 6/1, 6/2A and 6/2B over an extent of 12.80.50 hectares, Thollamur Village, Vanur Taluk, Villupuram District has proposed to Mining project of Rough stone and Gravel quarry. This activity attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(a) of the said notification.

Furthermore, the DEE, TNPCB, Villupuram, has informed that the SEIAA-TN issued the Terms of Reference (ToR) with a public hearing for preparing the Environmental Impact Assessment (EIA) report for the aforementioned activity under the Environmental Impact Assessment Notification, 2006 on 20.06.2025. The project proponent has submitted the draft EIA report to the office of the DEE, TNPCB, Villupuram. A public notice for the public hearing, scheduled on 18.09.2025, was published in *The Times of India* and *Dhinakaran* on 15.08.2025 with the approval of the District Collector, Villupuram. This public hearing is for the proposed industry of M/s. G. Velu Rough Stone and Gravel Quarry, and public announcements have been made via loudspeakers and pamphlets distributed in the surrounding villages.

The District Environmental Engineer has informed that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted by the EIA consultant will be explained through a PowerPoint presentation by the project proponent/EIA consultant. Furthermore, the DEE stated that after the presentation, the public can express their views, suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN.

The Revenue Divisional officer, Villupuram requested the project proponent to explain the detail of the project and the EIA study conducted by them to the public in detail.

The project proponent explained the summary of the project and informed that on behalf of the project proponent EIA Co-ordinator will explain about the project.

The representative of project proponent explained the summary of the project and informed that on behalf of the project proponent Mr.G.Velu, Proprietor of the M/s.G.Velu Rough Stone and Gravel Quarry Explained about the project and he welcomed the Revenue Divisional officer, the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials and explained the details of the project with help of power point presentation.

The Revenue Divisional officer, Villupuram has invited members of the public to present their views, suggestions, or comments regarding the above said proposal/project in a detailed and organized manner. Participants may express their opinions either verbally or in writing. Before presenting, individuals are kindly requested to provide their full name and address for official records.

**Tmt. Vimala, Thollamur Village:**

- She stated that since the operations are carried out in accordance with the Government's guidelines and under their directions, the quarrying activity would not cause any disturbance to the public. Therefore, she expressed that no objection and extends her support to the project.
- She further mentioned that operation under the Government's rules would help improve their economy and livelihood.
- She also expressed that the establishment of this quarry would create employment opportunities, contribute to the development of schools, encourage tree plantation, and ensure the safe maintenance of the surroundings and roads.
- Additionally, she stated that if welfare schemes for the poor are implemented, and if the quarry functions without causing any harm to the environment and their surroundings while supporting overall development, then they would have no objection to the establishment of the quarry.

**Tmt.Saranya, Eraiyur Village:**

- She stated that the establishment of this project would be highly beneficial to them, that it would create employment opportunities for the people in their households, and she expressed her support for the project.

**Thiru. Pradhap, Eraiyur Village:**

- He stated that this project should operate strictly within the limits and approvals granted by the Government, and expressed her support while making this request.

**Thiru. Ezhumalai, Thollamur Village:**

- He stated that even if this project excavates more than the government-approved limits, none of the quarries in our village have properly followed the specified conditions. He also mentioned that blasting without proper notice and the dust spreading on roads causes inconvenience to school students and vehicle drivers.
- Furthermore, he requested that tree saplings should be properly planted, and that it should be verified whether water is being managed correctly.
- He also requested that the quarry should provide employment to at least 50 people from their village.
- He expressed that this public hearing alone will not resolve the matter. He emphasized that since this quarry is meant for ordinary jobs like stone breaking, employment opportunities should be made available for the people in their village.

**Thiru. Dharmendiran, Eraiyur Village:**

- He stated that establishing the quarry would bring significant benefits. He mentioned that a portion of the revenue generated from the quarry should be allocated to the village, which would provide employment opportunities for the villagers.
- He also said that if there are any complaints, they would be communicated in writing, and that the authorities should take appropriate action. He emphasized that this project would be beneficial to the village and expressed his support accordingly.

**Thiru.Parthiban, Thollamur Village:**

- He stated that many quarries have been granted permission up to this day, and that many public consultation meetings have been conducted.
- He requested that the environmental officers personally visit and inspect his village. He mentioned that the surrounding area is not proper, that there is dust on both sides of the roads, and that vehicles cannot pass easily.

- Students from Thollamur village go to Karsanur for their studies. He said that buses are available in the morning to take them to school, but there is no bus service in the evening.
- He further stated that trucks are carrying excessive loads. The type of trucks carrying the loads is not specified in the regulations.
- He mentioned that the notices issued by the government and the visuals shown in the video are not understood by the general public residing there. Since the slides are changed immediately, even the information on them cannot be properly viewed. Regarding the books (in English and Tamil) and CDs about the project in the Panchayat Union and other government offices, none of the people who visited there were aware of them.
- He said that although a notice about the public consultation meeting has been issued, there is no information about in which village it was issued.
- Someone mentioned that establishing the quarry would benefit the people of Erayur and that a Mines Fund would be available from the quarry. However, no one in the village knows how much should be taken or how much funding is allocated.
- He stated that the conditions prescribed for previously approved quarries have not been properly followed. He also mentioned that the quarry location does not directly affect them since it is situated a little away from their village. The video does not show any photograph indicating where the notice about the consultation meeting was issued.
- He mentioned that water should be sprinkled every half hour, but this is not properly followed in the residential areas. The Pollution Control Board has not noticed this. People face difficulties and accidents due to dust coming from the quarries.
- He said that even if they raise objections, permission would still be granted. Therefore, he felt that raising objections is useless. He requested that at least their voices be somewhat heard.
- He stated that dust from the stone crushers causes school students to cover their faces while crossing the roads, and that he has proper evidence of this. He emphasized that there is no safety for the students.

- He also requested that buses and road facilities needed by the villagers should be properly provided, and that officials should inspect the roads once when they visit.
- He acknowledged that quarries are necessary and that construction materials should be taken from places where they are abundantly available. He stated that they are aware of this and added that the project brings both benefits and harms to the people, with harms being more significant.
- Specifically, he mentioned that kidney stones are occurring, and in their village alone, fifty people have been affected, with twenty having died. He himself has also suffered from a kidney problem. He added that adequate medical camps have not been properly conducted.
- He stated that Thollamur village has the highest number of stone quarries, and it is unknown whether fines for violations were properly collected by the government. Dust is a major problem in their village.
- Many industries are located near their village. He requested that the Pollution Control Board work at least for the benefit of some people.
- A newly started iron factory in Thollamur village has put up a name board written with sketch pen without any resolution from the Panchayat. He requested the Pollution Control Board to take notice of all these.
- If the impact is minimal, they would not raise issues, but these activities affect all living beings. Since Thollamur has high kidney-related health issues, he said that even a small survey would make this clear.
- He requested that the government provide basic facilities required for a high-revenue village such as medical services, schools, bus facilities, road facilities, and environmental protection.
- He said that permission is granted after holding a public consultation meeting and that medical and other wastes are being dumped in their village. These should be inspected and verified.
- He stated that the project does not directly affect them and that the quarry is located somewhat far away, yet he requested officials to inspect Thollamur village, which lies on a vulnerable slope path.

- He mentioned that the District Environmental Engineer should inform them only about this project, and if they submit their opinions in writing, the Assistant Engineer will be sent for an on-site inspection.
- He concluded his speech by stating that he is unaware of how the previously closed quarry, which was dug beyond limits, is now functioning again.

**Thiru. Mukesh Sharma, Thollamur Village:**

- He stated that he has no objection to the establishment of the quarry and expressed his support, suggesting that trees and other greenery should be planted in a way that benefits the people.

**Thiru. Kalaivanan, Law college student, Thollamur Village:**

- He stated that a proper examination should be conducted to check whether the air quality is currently safe. He further mentioned that dust and air emissions from the quarries have caused respiratory illnesses among the people. During medical camps, it was observed that a large number of patients come from villages such as Thollamur, Erayur, Karasanur, and Nemili, suffering from diseases like tuberculosis and asthma.
- When asked about the cause, he stated that doctors have confirmed that the quarries are the main reason. He also noted that sufficient water is not being supplied, and although certain facilities exist, the people are being misled. Promised benefits, such as tree plantation and water supply, have not been properly implemented even after a six-month grace period.
- He emphasized that the area is not suitable for people to live in, and residents do not have the necessary economic means to relocate, yet the plan seems to focus on establishing the quarries alone.
- He requested that medical camps be conducted to provide detailed statistics on how many people have been affected before granting government approval. He highlighted that the health impacts on their village are significant.
- He mentioned that some argue basic facilities would be provided to the villagers because of the quarry, but questioned the benefit of establishing these only after making the area unsuitable for living.

- He added that even if their homes are simple, they would be fine as long as the air quality is good, and requested that a proper inspection of the village be conducted.

**Thiru. Dharmendhar, Eraiyur Village:**

- He stated that the quarries themselves do not cause any harm to them, but the crushers are the main source of impact. Therefore, he requested that the crushers be operated safely in a manner that does not cause any harm to the people. He further mentioned that the quarry does not cause any pollution and requested that the crushers be enclosed in boxes to prevent dust from spreading.

**Thiru. Setu, Eraiyur Village:**

- He stated that the quarry itself does not cause any harm. The dust and environmental impact occur only when the stones are crushed without using water or without covering the crushers during operation.

**Thiru. Subrayan, NGO, Thirupati:**

- He stated that they are participating in a four-state public consultation meeting. He requested that the project implement measures to ensure public safety, such as planting trees, conducting medical camps once every three months, and providing iron supplements to children.

**Thiru. Inbasekaran, Ranipet District, Arakonam:**

- He stated that officials should listen to the grievances of the people and forward them to the Government. The Government should not act unilaterally but should receive citizens' letters and take appropriate action. He also mentioned that he has been a social activist for six years and emphasized that the Government should support social activists like him and should not reduce their numbers.

**The following 24 members of the public have expressed their opinion in writing are as:**

| S.No | Name & Place | Comment |
| --- | --- | --- |
| 1 | Mr. K. Seenivasan,<br>District Organizer,<br>Bharatiya Nagariks Seva Sangam,<br>No. 24, Chetty Street, K. Pudupatti,<br>Thirumayam, Pudukkottai District – 622 001. | These peoples expressed his support for the proposed project and mentioned that the Pollution Control Board has been functioning well, contributing 10% of its profits toward the development of this village. He further requested that this practice continue. |
| 2 | Mr. K. Ayyappan,<br>Union Organizer, Koliyanur,<br>Bharatiya Nagarik Seva Sangh,<br>No. 3/92, Kavanippakkam,<br>Thiruppachchanur Post,<br>Viluppuram District – 605 602. | |
| 3 | Mr. V. Manikandan,<br>Coordinator,<br>Bharatiya Nagarik Seva Sangh,<br>No. 7, Rasak Way Out, 4th Street,<br>Keelperumpakkam, Viluppuram District – 605 602. | |
| 4 | Mr. M. Sivanathan,<br>Deputy Coordinator,<br>Bharatiya Nagarik Seva Sangh,<br>No. 11, Rasak Way Out,<br>Keelperumpakkam, Viluppuram District – 605 602. | |
| 5 | Mr. S. Marudu,<br>Organizer,<br>Bharatiya Nagarik Seva Sangh,<br>No. 18, Govindasamy Pillai Street, | |

| | | |
|---|---|---|
| | Keelperumpakkam, Viluppuram District – 605 602. | |
| 6 | Mr. V. Sureksh,<br>Deputy Coordinator,<br>Bharatiya Nagarik Seva Sangh,<br>No. 18, Rasak Way Out, 4th Street,<br>Keelperumpakkam, Viluppuram District – 605 602. | |
| 7 | Mr. M. Panchamoorthy<br>Thollamur Village,<br>Vaanur Taluk,<br>Viluppuram District – 605 602. | These peoples expressed his support for the proposed project and requested that it provide employment opportunities to the local people, facilitate tree plantation, and ensure that CSR funds are utilized for the benefit of the local community, while also assisting in creating additional employment opportunities. |
| 8 | Mr. Somu<br>S/o. Rajavel,<br>Mariyamman Kovil Street,<br>Thollamur Village,<br>Vaanur Taluk,<br>Viluppuram District – 605 602. | |
| 9 | Mr. P. Praveen Kumar<br>Thollamur Village,<br>Vaanur Taluk,<br>Viluppuram District – 605 602. | |
| 10 | Mr. Gokulakrishnan<br>S/o. Subramani,<br>1/3 Mariyamman Kovil Street,<br>Thollamur Village,<br>Vaanur Taluk,<br>Viluppuram District – 605 602. | |
| 11 | Mr. Arulkumar<br>S/o. Janakiraman,<br>Mariyamman Kovil Street, | |

| | | |
|---|---|---|
| | Thollamur Village,<br>Vaanur Taluk,<br>Viluppuram District – 605 602. | |
| 12 | Mr. Manipalan<br>S/o. Suppurayan,<br>Mariyamman Kovil Street,<br>Thollamur Village,<br>Vaanur Taluk,<br>Viluppuram District – 605 602. | |
| 13 | Mr. Arul Murugan<br>S/o. Ezhumalai,<br>Mariyamman Kovil Street,<br>Thollamur Village,<br>Vaanur Taluk,<br>Viluppuram District – 605 602. | |
| 14 | Mr. Arun Kumar<br>S/o. Arunachalam,<br>Thollamur Village,<br>Vaanur Taluk,<br>Viluppuram District – 605 602. | |
| 15 | Mr. Sekar<br>S/o. Sivanu,<br>1/13 Othavadi Street,<br>Thollamur Village,<br>Vaanur Taluk,<br>Viluppuram District – 605 602. | |
| 16 | Mr. Ezhumalai S/o. Kuppan,<br>1/15 Mettu Street,<br>Thollamur Village,<br>Vaanur Taluk,<br>Viluppuram District – 605 602. | |

| | | |
|---|---|---|
| 17 | Mr. S. Venkata Suppaiya<br>President,<br>Poojitha Swachchananda Seva Society,<br>1/45, 123 Wards, Kodtha Madhavaram,<br>Siddavattam, Kadapa,<br>Andhra Pradesh. | These peoples expressed his support for the proposed project and requested that it provide employment opportunities to the local people, support tree plantation efforts, and ensure that CSR funds are directed for the benefit of the local community, while also assisting in generating additional employment. |
| 18 | Mr. B. Supparamaiya<br>Secretary and Director,<br>Rural Upliftment Network Society, NGO,<br>Tirupati. | |
| 19 | Mr. R. Ravi Kumar<br>President,<br>Shri Rudra Foundation ORG,<br>53/2, Vidya Nagar,<br>Suryapet. | |
| 20 | Mr. T. Anil Reddy<br>President, NGO<br>Green Innovation Natural and Environmental Society,<br>5-7-74, APHB Street, Karimnagar,<br>Telangana. | |
| 21 | Mr. G. Pandu<br>President, NGO<br>Glory Charitable Trust,<br>3-9-72/A, Rajiv Nagar,<br>Suryapet. | |
| 22 | Mr. M. Sudhakar<br>Founder, Rural Women's Development Center,<br>UCO Nagar, Muthu Kumar Street, | |

| | | |
|---|---|---|
| | Nellore. | |
| 23 | Mr. P. Hazaradiya<br>President<br>Development Action Center,<br>Nellore. | |
| 24 | Mr. S. Hankaiya<br>President, Sathyavedu Constituency<br>Farmers and Workers Protection<br>and Action Center. | |

**Thereafter no views/comments were raised.**

**The District Environmental Engineer, TNPCB, Villupuram.**

Finally the DEE, TNPCB, Villupuram summarized views, suggestion and responses of the public about the Project and also informed that the said views, suggestion and responses of the public are recorded through video-graphy and the same will be sent to the State Environmental Impact Assessment Authority, Tamilnadu along with the written representation received from the Public.

Furthermore, the DEE, TNPCB, Villupuram has informed that as per the public notice in the newspaper for this project the proceeding of the public hearing will be made displayed at the District Collectorate Office - Villupuram, Vanur Panchayat Union office, Vanur Taluk office, Thollamur Village Panchayat Office and Office of the District Environmental Engineer, TNPCB, Vilupuram, and also in the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Commands, if any, on the proceeding may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority –TamilNadu / MoEF&CC) and the applicant concerned.

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Villupuram**

**Revenue Divisional officer,**
**Villupuram**

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 15.08.2025 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 16 & 82 Persons).
3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting – 24 Nos.

**<u>விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தொள்ளாமூர் கிராமம், சர்வே. எண்கள் 4/1, 4/2A,4/2B,4/2C,6/1,6/2A மற்றும் 6/2B ல் 2.80.50 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள் G. வேலு சாதாரண கல் மற்றும் சரளை குவாரி உத்தேசிக்கப்படுவது குறித்து மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக 18.09.2025 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விபரங்கள்</u>**

திட்டத்தின் பெயர்: விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தொள்ளாமூர் கிராமம், சர்வே. எண்கள் 4/1, 4/2A, 4/2B, 4/2C, 6/1, 6/2A மற்றும் 6/2B ல் 2.80.50 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள் G. வேலு சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவப்படவுள்ளது.

இடம்: தி/ள் தனலட்சுமி மஹால், SH -136, கரசனூர் கிராமம், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 604 304.

நாள் மற்றும் நேரம் : 18/09/2025 - முற்பகல் 10.30 - 11.30

பங்கேற்றோர்:

<u>திருவாளர்கள்</u>

| | | |
|---|---|---|
| 1. | திரு. ப. முருகேசன், | வருவாய் கோட்டாட்சியர்,<br>விழுப்புரம். |
| 2. | Dr.செ.இராசேந்திரன், எம்.இ.,பி.எச்.டி., | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 3. | திரு. ரா. வெங்கடேக்ஷ்வரன், இ.ஆ.ப. | உதவி ஆட்சியர் பயிற்சி,<br>விழுப்புரம். |
| 4. | திரு.P. வித்தியாதரன், | வட்டாட்சியர்,<br>வானூர். |

| | | |
|---|---|---|
| 5. | திரு. S. இளையராஜா, | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 6. | திரு. P. ராம்குமார், | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 7. | திரு. நா. தினேஷ் பாபு, | உதவியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 8. | திரு. ம. சடகோபன், | தட்டச்சர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 9. | திரு. R. ரமேஷ், | வருவாய் ஆய்வாளர்,<br>பிரம்மதேசம். |
| 10. | டாக்டர். எம். சுரேஷ், | EIA Consultant,<br>தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ்,<br>ஓமலூர், சேலம் – 636455. |
| 11. | திரு. G. பாலசுப்ரமணி | தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ்,<br>ஓமலூர், சேலம் – 636455. |
| 12. | திரு. வே. வெங்கடேஷ் | புவியியலாளர்,<br>தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ்,<br>ஓமலூர், சேலம் – 636455. |
| 13. | திரு. G. வேலு | உரிமையாளர்,<br>G. வேலு சாதாரண கல் மற்றும் சரளை<br>குவாரி, தொள்ளமூர் கிராமம். |
| 14. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (84 நபர்களின் பட்டியல்<br>இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர் மற்றும்

உதவி ஆட்சியர் (பயிற்சி), விழுப்புரம் அவர்களையும், பங்கேற்கவந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தொள்ளமூர் கிராமம்., தி/ள் G. வேலு சாதாரண சாதாரண கல் மற்றும் சரளை குவாரி, சர்வே. எண்கள் 4/1, 4/2A, 4/2B, 4/2C, 6/1, 6/2A மற்றும் 6/2B ல் 2.80.50 ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விபரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பிற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 20.06.2025 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/ள் G. வேலு சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவனத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கரசானூர் கிராமம், தி/ள் தனலட்சுமி மஹால், SH – 136, 18.09.2025 அன்று காலை 10.30 - 11.30 மணியளவில் நடைபெறும் என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" மற்றும் "தினகரன்" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் 15.08.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள் G. வேலு சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவனத்தின் EIA Consultant, தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று கூறினார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உதவி ஆட்சியர் (பயிற்சி), விழுப்புரம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார் .

டாக்டர். எம். சுரேஷ் (EIA Consultant), தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உதவி ஆட்சியர் (பயிற்சி), விழுப்புரம் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உதவி ஆட்சியர் (பயிற்சி), விழுப்புரம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள்

தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1. திருமதி. விமலா, தொள்ளமூர் கிராமம்**

- இவர் கூறுகையில், அரசாங்கத்தின் வழிமுறைகளை பின்பற்றி அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுவதால் இதில் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி கல்குவாரி மற்றும் செம்மண்குவாரி நடத்துவதனால் தங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.
- மேலும் அரசாங்க விதிகளுக்கு உட்பட்டு செயல்படுவதால் தங்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடையும் என்றும் தெரிவித்தார்.
- இக்குவாரி அமைப்பதன் மூலம் வேலைவாய்ப்பு பெருக வேண்டும் என்றும், பள்ளிகளின் மேம்பாட்டுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்றும், மரக்கன்றுகளை நடவேண்டும் என்றும், சுற்றுப்புறம் மற்றும் சாலைகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.
- ஏழையெளிய மக்களாகிய நலத்திட்ட உதவிகளும், எங்கள் சுற்றுப்புறத்திற்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் எங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக அமைந்தால் குவாரி அமைப்பதில் தங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும் தெரிவித்தார்.

2. திருமதி. சரண்யா, எறையூர் கிராமம்,

- இவர் கூறுகையில், இத்திட்டம் அமைப்பதன் மூலம் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும், வீட்டில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், இத்திட்டத்திற்கு தனது ஆதரவினைத் தெரிவித்தார்.

3. திரு. பிரதாப், எறையூர் கிராமம்,

- இவர் கூறுகையில், இத்திட்டம் அரசு அனுமதிக்கப்பட்ட அளவோடும், அங்கீகாரத்தோடும் சரியாக செயல்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து தனது அதரவினை தெரிவித்தார்.

4. திரு. ஏழுமலையான், தொள்ளமூர் கிராமம்,

- இவர் கூறுகையில், இத்திட்டம் அரசு அனுமதிக்கப்பட்ட அளவினை விட அதிகமாக தோண்டப்படுதாலும், குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளையும் முறையாக எங்கள் ஊரில் உள்ள எந்த குவாரியும் பின்பற்றப்படவில்லை. குறிப்பிடப்படாமல் வெடி வைப்பதாலும் சாலைகளில் செல்லும் பொழுது பவுடர் பறப்பதால் பள்ளி மாணவர்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு சிரமமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
- மேலும், மரக்கன்றுகளை சரியாக நடவேண்டும் என்றும், தண்ணீரை சரியாக தெளிக்கிறார்களா என்றும், சரிபார்க்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.
- மேலும், இவர் குவாரி அமைப்பதில் தங்கள் ஊர் பொதுமக்களில் 50 நபர்களுக்காவது வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

- இன்று நடைபெறும் இந்த கருத்துக் கேட்பு கூட்டத்துடன் இது முடிந்து விடாது. சாதாராண ஒரு ஜாக்கி பிடிக்கும் தொழிலாவது அமைய உள்ள இந்த குவாரியினால் எங்கள் ஊரில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன் வைத்தார்.

**5 திரு. தர்மேந்திரன், எறையூர் கிராமம்,**

- இவர் கூறுகையில், குவாரி அமைப்பது நல்ல பலன் அளிக்கும் என்று தெரிவித்தார். குவாரி மூலம் வரும் வருவாயில், கால் பகுதி கிராமத்திற்கு ஒதுக்க வேண்டும் என்றும், அதன் மூலம் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், மேலும் ஏதேனும் புகார்கள் இருந்தால் தாங்கள் கடிதம் மூலம் தெரிவிப்போம் என்றும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதனால் நமது கிராமத்திற்கு நன்மை உண்டாகும் என்று குறிப்பிட்டு தனது அதரவை தெரிவித்தார்.

**6 திரு. பார்த்திபன், தொள்ளமூர் கிராமம்,**

- இவர் கூறுகையில், நிறைய குவாரிகளுக்கு இதநாள் வரையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், நிறைய கருத்துக்கேட்புக் கூட்டம் நடைப்பெற்றுள்ளது என்று கூறினார்.
- இவர் சுற்றுச்சூழல் அதிகாரிகளை ஒரு முறை தனது கிராமத்தினை நேரில் வந்து ஆய்வு மேற்கொள்ளுமாறு கோரினார். சுற்றுப்புறம் சரியாக இல்லை என்றும், சாலைகளின் இருபுறங்களிலும் பவுடராக உள்ளது என்றும், வாகனங்கள் சரியாக செல்ல முடியவில்லை என்று தெரிவித்தார்.
- தொள்ளமூர் கிராம மாணவர்கள் கர்சானூர் சென்று படிக்கிறார்கள். அவர்கள் பள்ளிகளுக்கு செல்ல காலையில் பேருந்து வசதி உள்ளது என்றும், மாலையில் பேருந்து வசதி இல்லை என்று அவர் தெரிவித்தார்.

- மேலும், சரக்குந்துகளில் அதிகப்படியான சுமைகளை ஏற்றிக்கொண்டு செல்கிறார்கள் என்று தெரிவித்தார். சக்கை கொண்டு செல்லும் லாரிகள் எவ்விதமான லாரி என்று நிபந்தனைகளில் குறிப்பிடப்படவில்லை.
- அரசாங்கம் கொடுக்கும் நோட்டீஸ் மற்றும் இங்கு காணொளிக்கப்படும் காட்சிகள் இங்கு அமர்ந்துள்ள ஊர் பொதுமக்களுக்கு புரியவில்லை என்றும், உடனுக்குடன் Slide மாற்றப்படுகின்றதால், அதில் உள்ள தகவல் கூட சரியாக பார்வையிட முடியவில்லை என்று தெரிவித்தார். ஊராட்சி ஒன்றிய மற்றும் இதர அரசு அலுவலகங்களில் திட்டம் குறித்த புத்தகம் (ஆங்கிலம் மற்றம் தமிழ்) மற்றும் CD ஆகியவை குறித்து, இங்கு வருகை புரிந்த மக்கள் எவருக்கும் தெரியாது என்று கூறினார்.
- கருத்துக் கேட்பு கூட்டம் குறித்து நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார்கள், எந்த ஊரில் வழங்கப்பட்டது குறித்த தகவல்கள் இல்லை என்றார்.
- குவாரி அமைவதனால் எறையூர் மக்களுக்கு நன்மை உண்டாகும் என்று ஒருவர் குறிப்பிட்டுள்ளார், குவாயினால் வரும் Mines Fund கிடைக்கும் என்று கூறியுள்ளார். ஆனால் எவ்வளவு அளவு எடுக்க வேண்டும், எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பது குறித்து இங்கு உள்ள மக்கள் எவருக்கும் தெரியாது.
- அரசாங்கம் இதற்கு முன் அனுமதி அளித்த எந்த குவாரி சரிவர குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றப்படவில்லை. மேலும், அவர் குவாரி அமைப்பதில் தங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லையென்றும், ஏனெனில் அது தங்கள் ஊரிலிருந்து சற்று தொலைவில் அமைந்து உள்ளது என்று தெரிவித்தார். கருத்துக் கேட்பு கூட்டம் குறித்த அறிவிப்பு எங்கு

வழங்கப்பட்டது என்பது குறித்த தகவல் காணொளி காட்சியில் இடம் பெற்ற புகைப்படத்தில் இல்லை.

- அரை மணி நேரத்திற்கு ஒருமுறை தண்ணீர் தெளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அதனை மக்கள் வாழும் பகுதிகளில் முறையாக பின்பற்றப்படுவதில்லை. மாசு கட்டுப்பாடு வாரியமும் இதனை கண்டு கொள்ள வில்லை. குவாரிகளில் இருந்து வெளிவரும் தூசுகளால் மக்கள் சிரமப்பட்டு, விபத்துகள் நேரிடுகின்றன.
- நாங்கள் இதற்கு ஆட்சேபனை தெரிவித்தால் கூட அனுமதி வழங்கத்தான் போகிறீர்கள். ஆகையால் நான் இதற்கு ஆட்சேபனை தெரிவித்தும் பயனில்லை. எங்கள் குரலுக்கு சற்று செவி சாய்க்குமாறு மட்டும் கேட்டுக் கொண்டார்.
- தார் ஆலைகளிலிருந்து வெளிவரும் தூசுகளால் பள்ளி மாணவர்கள் சென்று வரும்பொழுது முகத்தை மூடியவாறு சாலைகளை கடந்து செல்கிறார்கள் என்றும், அதற்கான சரியான ஆதாரம் அவரிடம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மாணவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்தார்.
- மேலும், தங்களுக்கு தேவையான பேருந்து, சாலை வசதிகளை சரியாக வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். பின்னர் அதிகாரிகள் செல்லும் பொழுது அந்த சாலைகளை ஒருமுறை பார்வையிட்டு செல்லுமாறும் கேட்டுக்கொண்டார்.
- குவாரி தேவைதான், கட்டுமானப் பணிகளுக்கு தேவைப்படும் பொருட்கள் எங்கும் அதிகம் உள்ளதோ அங்கு தான் அதனை எடுக்க முடியும். எங்களுக்கு இது தெரியாமல் இல்லை என்று கூறி, இத்திட்டத்தின் மூலம் மக்களுக்கு

நன்மைகள் மற்றும் தீமைகள் இரண்டும் உள்ளதாகவும் அதிலும் குறிப்பாக தீமைகளே அதிக அளவில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

- குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் சிறுநீரக கல் ஏற்படுவதாகவும் தங்கள் ஊரில் மட்டும் ஐம்பது நபர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் இருபது நபர்கள் உயிரிழந்ததாகவும், நானும் ஒரு சிறுநீரக பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், போதிய மருத்துவ முகாம்கள் சரியாக நடத்தப்படவில்லை என்று தெரிவித்தார்.
- தொள்ளமூர் கிராம பகுதியில் தான் அதிக கல் குவாரிகள் உள்ளன என்றும், அவைகளில் விதிமீறல்களுக்கு அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட அபராதம் கூட முறையாக வசூலிக்கப்பட்டதா என தெரிய வில்லை. பவுடர் பிரச்சினை மிகப்பெரிய பிரச்சினையாக எங்கள் கிராமத்தில் உள்ளது.
- எங்கள் ஊருக்கு அருகாமையில் நிறைய தொழிற்சாலைகள் உள்ளன. மாசு கட்டுப்பாடு வாரியம் சிறிதளவு மக்களுக்காக பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டார்.
- எங்கள் ஊரான தொள்ளமூர் கிராமத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இரும்பு தொழிற்சாலை ஒன்று ஊராட்சியில் எவ்வித தீர்மானமும் நிறைவேற்றப்படாமல் ஸ்கெட்ச் பேனாவால் எழுதப்பட்ட பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் மாசு கட்டுப்பாடு வாரியம் கண்டு கொள்ள வேண்டும்.
- குறைந்தபட்ச பாதிப்பு என்றால் நாங்கள் இது குறித்து கேட்க போவதில்லை, இவைகள் அனைத்து உயிருக்கு பாதிப்பு ஏற்படுத்த கூடியவை. தொள்ளமூர் கிராமத்தில் அதிக சிறுநீரக பாதிப்பு உள்ளதால், நான் கூறுவது ஒரு சிறிய கணக்கெடுப்பு எடுத்து பார்த்தால் உங்களுக்கு புரியும் என்று தெரிவித்தார்.

- அதிக வருவாய் உள்ள எங்கள் கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளான மருத்துவம், பள்ளிகள், பேருந்து வசதி, சாலை வசதி, சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு போன்றவைகளை அரசாங்கம் செய்து கொடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.
- கருத்துக் கேட்பு கூட்ட கருத்துக் கணிப்பு கேட்டு நீங்கள் அனுமதி வழங்குவது உறுதி. மருத்துவ கழிவுகள் மற்றும் இதர கழிவுகள் எங்கள் ஊரில் கொட்டப்படுகின்றன. அவற்றை ஆய்வு மேற்கொண்டு உறுதி செய்ய வேண்டும்.
- இத்திட்டம் அமைப்பதில் தங்களுக்கு எந்தவித இடையூறும் இல்லையென்றும், குவாரி அமையுள்ள இடம் சற்று தூரமாக தான் உள்ளது. இருப்பினும் அத்திப்பட்டி போல் அழிவு பாதையில் உள்ள தொள்ளமூர் கிராமம் மீட்டமைக்க, அதிகாரிகள் ஆய்வு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.
- இதற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் இத்திட்டம் குறித்து மட்டும் இங்கு தெரிவிக்குமாறும், தங்கள் கருத்துகளை மனுவாக தெரிவித்தால் உதவி பொறியாளர் நேரில் ஆய்வு மேற்கொள்ள அனுப்பி வைப்பதாக தெரிவித்தார்.
- அளவுக்கு அதிகமாக தோண்டப்பட்டதால் மூடப்பட்ட குவாரி மீண்டும் எவ்வாறு செயல்படுகிறது என்பது தனக்கு புலப்படவில்லை என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

**<u>7. திரு. முகேக்ஷ் சர்மா, தொள்ளமூர் கிராமம்,</u>**

- இவர் கூறுகையில், குவாரி அமைப்பதில் தங்களுக்கு எவ்வித இடையூறும் இல்லையென்றும் மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் மரக்கன்று போன்றவைகள் நட வேண்டும் என்று கூறி தனது அதரவை தெரிவித்தார்.

8. திரு. கலைவாணன், சட்டக்கல்லூரி மாணவர், தொள்ளமூர் கிராமம்,

- இவர் கூறுகையில், தற்போது காற்றின் அளவு சரியாக உள்ளதா என்று பரிசோதனை செய்யுமாறு தெரிவித்தார். மேலும், குவாரிகளிலிருந்து வெளிவரும் காற்றால் தனக்கு சுவாசக்குழல் வியாதி ஏற்பட்டுள்ளதாகவும் மேலும், மருத்துவ மனையில் விசாரித்ததில் தொள்ளமூர், எறையூர், கராசானூர், நெமிலி போன்ற கிராமங்களிலிருந்து அதிகப்படியான நோயாளிகள் வருவதாகவும் மேலும், காசநோய், ஆஸ்துமா போன்ற நோய்களால் பாதிப்பு அடைவதாகவும் அவர் தெரிவித்தார்.
- மேலும், இதற்கான காரணம் என்னவென்று கேட்கையில் குவாரிகள் மட்டுமே தான் காரணம் என்று சொல்லுகிறார்கள் மருத்துவர்கள் என்று அவர் தெரிவித்தார். போதிய நீர் தெளிக்கப்படுவதில்லை. எவ்வளவு வசதிகள் உள்ளது, ஆனால் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். ஆனால், மக்களுக்கு செய்யப்படும் என்று சொல்லும் சலுகைகளான மரக்கன்று நடுதல், தண்ணீர் தெளிப்பு போன்றவை 6 மாத கால அவகாசம் கொடுத்தாலும் சரியாக செய்யப்படவில்லை என்று தெரிவித்தார்.
- பொதுமக்கள் வசிப்பதற்கு சரியான இடமாக இல்லையென்றும், மக்கள் வேறு இடங்களுக்கு செல்ல போதிய பொருளாதார வசதி இல்லையென்றும் மேலும், மக்களை வெளியே அனுப்பிவிட்டு கல்குவாரிகளை மட்டும் அமைக்குமாறும் அவர் தெரிவித்தார்.
- மருத்துவ முகாம் அமைத்து எவ்வளவு மக்கள் பாதிப்பு அடைந்துள்ளார்கள் என்று புள்ளி விவரம் கொடுத்துவிட்டு அரசாங்கம் அனுமதி அளிக்குமாறு

கேட்டுக்கொண்டார். சுகாதார ரீதியாகவும் நிறைய பாதிப்பு எங்கள் ஊருக்கு உள்ளதாக கூறினார்.

- ஒருவர் கூறுகிறார், குவாரி அமைவதனால் எங்கள் ஊர் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்று, வாழவே தகுதி இல்லாத இடமாக மாறிய பின் அடிப்படை வசதி அமைத்து கொடுத்து என்ன பயன் என்று கேட்டார்.
- கூரை வீடாக இருந்தாலும், நல்ல காற்று இருந்தால் மட்டும் எங்களுக்கு போதும் என்று குறிப்பிட்டு, ஒரு முறை எங்கள் கிராமத்தை ஆய்வு மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

**<u>9. திரு. தர்மேந்தர், எறையூர் கிராமம்,</u>**

- இவர் கூறுகையில், குவாரிகளால் தங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லையென்றும் மேலும் கிரஷர்களால் தான் அதிகம் பாதிப்பு உள்ளதாகவும் அதனால் கிரஷர்களை பாதுகாப்பான முறையில் பயன்படுத்தி மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாக்குமாறும் அவர் தெரிவித்தார். மேலும், குவாரியால் எந்தவித மாசும் ஏற்படவில்லை என்றும் கிரஷர் பவுடர் வெளிவராதவாறு காற்று மாசு தடுப்பு சாதனங்களை பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

**<u>10. திரு. சேட்டு, எறையூர் கிராமம்,</u>**

- இவர் கூறுகையில், குவாரியால் எந்தவித பாதிப்பும் இல்லையென்றும், கல் அரைக்கும் பொழுது தண்ணீரை ஊற்றாமல் அரைப்பதாலும், அரைக்கும் பொழுது மூடாமல் அரைப்பதாலும் தான் பவுடர் உருவாகி சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்று தெரிவித்தார்.

**11. திரு. சுப்புராயன், NGO, திருப்பதி,**

- இவர் கூறுகையில், நாங்கள் ஒரு நான்கு மாநில கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொள்கிறோம். இத்திட்டம் மக்களுக்கு பாதுகாப்பு தரும் வகையில் மரக்கன்று நடுதல், மூன்று மாதத்திற்கு ஒருமுறை மருத்துவ முகாம் நடத்துதல் மற்றும் குழந்தைகளுக்கு இரும்புச்சத்து மாத்திரை வழங்குதல் போன்றவைகளை நடத்துமாறு கேட்டுக்கொண்டார்.

**12. திரு. இன்பசேகரன், இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம்**

- இவர் கூறுகையில், மக்களின் நிறை குறைகளை கேட்டு அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அனுப்புமாறும் மேலும், அரசாங்கம் ஒருபக்கமாக செயல்படாமல் மக்களின் கடிதங்களை பெற்று அவர்களுக்கு உரிய நடவடிக்கை அளிக்க வேண்டும் என்றும், தான் ஆறு ஆண்டு காலமாக சமூக ஆர்வலராக உள்ளதாகவும், என்னை போன்ற சமூக ஆர்வலர்களுக்கு அரசு ஆதரவு அளிக்க வேண்டும் அவர்களின் எண்ணிக்கையை குறைக்க கூடாது. என்றும் தெரிவித்தார்.

**கீழ்க்கண்ட இருபத்து நான்கு பொதுமக்கள் தங்கள் கருத்தை எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | திரு. K. சீனுவாசன், மாவட்ட அமைப்பாளர், தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம், எண். 24, செட்டி தெரு, K.புதுப்பட்டி, திருமயம், புதுக்கோட்டை மாவட்டம் - 622 001. | இவர்கள் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சிறப்பாக செயல்பட்டு 10 % இலாபத்தினை இக்கிராமத்தின் முன்னேற்றத்திற்காக வழங்கியதாகவும், மேலும் இது |
| 2. | திரு. K. ஐயப்பன், கோலியனூர் ஒன்றிய அமைப்பாளர், தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம், எண். 3/92 காவணிப்பாக்கம், திருப்பாச்சனூர் | |

| | | |
|---|---|---|
| | அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் - 605 602. | தொடர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். |
| 3. | திரு. V. மணிகண்டன், நகர ஒருங்கிணைப்பாளர், திர/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம், எண். 7, ரசாக் வே அவுட், 4 வது தெரு, கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |
| 4. | திரு. M. சிவநாதன், நகர துணை ஒருங்கிணைப்பாளர், தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம், எண். 11, ரசாக் வே அவுட், கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |
| 5. | திரு. S. மருது, நகர அமைப்பாளர், தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம், எண். 18, கோவிந்தசாமி பிள்ளை தெரு, கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |
| 6. | திரு. V. சுரேக்ஷ், நகர துணை ஒருங்கிணைப்பாளர், தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம், எண். 18, ரசாக் வே அவுட், 4 வது தெரு, கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |
| 7. | திரு. ம. பஞ்சமூர்த்தி, தொள்ளமூர் கிராமம், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605 602. | இவர்கள் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு, மரக்கன்றுகளை வளர்த்திடவும் CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்றும் வேலைவாய்ப்பிற்கு உதவிடவும் |
| 8. | திரு. சோமு, த.பெ. ராஜவேல், மாரியம்மன் கோவில் தெரு, தொள்ளமூர் கிராமம், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |

| | | |
|---|---|---|
| 9. | திரு.ப. பிரவீன் குமார்,<br>தொள்ளமூர் கிராமம்,<br>வானூர் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம் - 605 602. | கேட்டுக் கொண்டார். |
| 10. | திரு.கோகுலகிருக்ஷ்ணன்,<br>த.பெ. சுப்பிரமணி,<br>1/3 மாரியம்மன் கோவில் தெரு,<br>தொள்ளமூர் கிராமம்,<br>வானூர் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |
| 11. | திரு.அருள்குமார்,<br>த.பெ. ஜானகிராமன்,<br>மாரியம்மன் கோவில் தெரு,<br>தொள்ளமூர் கிராமம்,<br>வானூர் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |
| 12. | திரு.மணிபாலன்,<br>த.பெ. சுப்புராயன்,<br>மாரியம்மன் கோவில் தெரு,<br>தொள்ளமூர் கிராமம்,<br>வானூர் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |
| 13. | திரு.அருள் முருகன்,<br>த.பெ. ஏழுமலை,<br>மாரியம்மன் கோவில் தெரு,<br>தொள்ளமூர் கிராமம்,<br>வானூர் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |
| 14. | திரு.அருண் குமார்,<br>த.பெ. அருணாச்சலம்,<br>தொள்ளமூர் கிராமம்,<br>வானூர் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம் - 605 602. | |

| | | |
|---|---|---|
| 15. | திரு.சேகர்,<br>த.பெ. சிவனு,<br>1/13 ஒத்தவாடி தெரு,<br>தொள்ளமூர் கிராமம்,<br>வானூர் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம் – 605 602. | |
| 16. | திரு.ஏழுமலை,<br>த.பெ. குப்பன்,<br>1/15 மேட்டுத் தெரு,<br>தொள்ளமூர் கிராமம்,<br>வானூர் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம் – 605 602. | |
| 17. | திரு. S. வெங்கட சுப்பையா,<br>தலைவர்,<br>பூஜ்ஜிதா ஸ்வச்சானந்தா சேவா சொசைட்டி,<br>1/45, 123 வார்ட்ஸ், கோட்ஹ மாதவரம், சிடவட்டம், கடப்பா, ஆந்திர பிரதேசம். | இவர்கள் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு, மரக்கன்றுகளை வளர்த்திடவும் CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்றும் வேலைவாய்ப்பிற்கு உதவிடவும் கேட்டுக் கொண்டார். |
| 18. | திரு. B. சுப்பாராமையா,<br>செயலாளர் மற்றும் இயக்குநர்,<br>ரூரல் அப்லிப்ச்மண்ட் நெட்வொர்க் சொசைட்டி, NGO, திருப்பதி. | |
| 19. | திரு. R. ரவி குமார்,<br>தலைவர்,<br>ஸ்ரீ ருத்ரா பவுண்டேக்ஷன் ORG,<br>53/2, வித்யா நகர், சூர்யபேட். | |
| 20. | திரு. T. அனில் ரெட்டி,<br>தலைவர், NGO.<br>க்ரீன் இன்னோவேக்ஷன் நேசுரல் மற்றும் என்விராண்மெண்டல் சோசைட்டி,<br>5-7-74, APHB தெரு, கரிம்நகர், தெலுங்கானா. | |

| | | |
|---|---|---|
| 21. | திரு. G. பண்டு,<br>தலைவர், NGO.<br>க்ளோரி சரிடபுள் ட்ரஸ்ட்,<br>3-9-72,/A, ராஜிவ் நகர், சூர்யபேட். | |
| 22. | திரு. M. சுதாகர்,<br>அமைப்பாளர்.<br>கிராமப்புற மகளிர் மேம்பாட்டு மையம்,<br>UCO நகர், முத்து குமார் தெரு, நெல்லூர். | |
| 23. | திரு. P. ஹஜராதியா,<br>தலைவர்,<br>வளர்ச்சி செயல்பாட்டு மையம்,<br>நெல்லூர். | |
| 24. | திரு. S. ஹன்கையா,<br>தலைவர்,<br>சத்யவேடு கான்ஸ்டுயன்ஸி விவசாயிகள் மற்றும் தொழிலாளிகள் பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டு மையம், | |

**பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம், திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகளின் சுருக்கத்தை கூறினார். மேலும், இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, வீடியோ கிராஃபி மூலம் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தர். பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களையும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும் மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - விழுப்புரம், வானூர்

ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வானூர் தாலுகா அலுவலகம், தொள்ளமூர் கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் ஆகிய இடங்களில் வைக்கப்படும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.in ல் வெளியிடப்படும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் -தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம்.

வருவாய் கோட்டாட்சியர்
விழுப்புரம்.

**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 15.08.2025).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (16 பக்கங்கள் 84 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட பெண்டிரைவ்.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 24 மனுக்கள்.